# அண்ணாவின் கடைசி நாள்கள்!...

கவிஞர்
**தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்



"எல்லோரும் இன்புற்று வாழும் இடந்தான் என் இலட்சியப் பூமி! ஒருவரை ஒருவர் அழுத்தாமல், ஒருவரை ஒருவர் சுரண்டாமல் "எல்லோருக்காகவும் நான் எனக்காக எல்லாரும்" என்ற முறையில் சமூக அமையுமானால், அதுதான் என் இலட்சிய பூமி!. அரசியல் முறையில் Federal ism கூட்டாட்சி என்று சொல்லலாம்; பொருளாதாரத் துறையில் Socialism "சமதர்மம்" என்று சொல்லலாம்; அரசியல் அமைப்பு முறைப்படி அதை Democracy சனநாயகம் என்று சொல்லலாம்; இலக்கியத்துறையில் அதை Idealism என்று கூறலாம். இவ்வாறு இன்புற்றிருக்கும் அந்தப் பூமிதான் என் இலட்சிய பூமி" என்று மக்கள் வெள்ளம் நிலை கொள்ளாமல் கூடியிருந்த சென்னை விருகம்பாக்கம் மாநாட்டில், 1967 ஜனவரி 1 அன்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்.

தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்து தமிழ் சமுதாயத்தை உயர்த்த அருந்தொண்டு செய்து மறைந்த பெருந்தகையாளர் பேரறிஞர் அண்ணா! வேற்றுமையில் ஒற்றுமை பேணவும், மதநல்லிணக்கம் காணவும், சாதி பேதமற்ற சமுதாயத்தை சமைக்கவும், மூடநம்பிக்கைகளைத் தகர்த்து அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து சமதர்மச் சமுதாயம் அமையவும் அவர் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு வந்ததால், அதில் பெரு வெற்றியும் கண்டவர்!தமிழ்த்தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவனிப் புகழும் நனிச் சிறந்த பேச்சாளர்; எழுச்சிமிகு எழுத்தாளர்; உயர்ந்த பண்பாளர்; எளிமை, நேர்மை உண்மைகளை அரசியலில் கடைப்பிடித்து வந்த வாழ்வியல் இலக்கணக் கல்வியாளர்! இளைய சமுதாயத்திற்கு ஒரு மேதகு வழிகாட்டியாக விளங்கியவர்! தமிழின மக்களுக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர்!

"எனக்குக் கிடைத்திருக்கிற படைக்கறிவுகள் தூய்மையாக இருக்கின்றன! கூர்மையாக இருக்கின்றன! தோழமைக் கட்சிகள் துணை நிற்க வெற்றிப்பாதையில் நடைபோட்டு உறுதியாகச் செயல்பட்டு இறுதியாக இலட்சிய பூமியை அடைவோம்" என்று அண்ணா மாநாட்டில் இறுதியாக எழுச்சி உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் தான் கழகப் பொருளாளராக இருந்த கலைஞர் அவர்கள் 11 இலட்சம் ரூபாயை அண்ணா இடத்தில் ஒப்படைத்தார்.

காங்கிரஸ் அரசை வீழ்த்த அண்ணா 1967 பிப்ரவரியில் நான்காவது பொதுத் தேர்தலைச் சந்தித்தார். சுதந்திரா கட்சி இடது கம்யூனிஸ்டு, சம்யுக்தா சோசியலிஸ்ட். தமிழரசுக் கழகம், நாம் தமிழர் இயக்கம், பிரஜா சோசியலிசம், முஸ்லீம் லீக் என ஏழு கட்சிகள் அண்ணா அமைத்த கூட்டணியில் இடம் பெற்றிருந்தன.

அண்ணா, கலைஞர், நாவலர் போன்றோர் தேர்தலில் போட்டியிட்டாலும், அவர்களுடன், கழக முன்னணியினர், கூட்டணிக் கட்சியினர் தேர்தல் பரப்புரை நாடு முழுவதும் செய்தார்கள். 2 கோடியே 79 இலட்சம் வாக்காளர்களில், ஒரு கோடியே 58 லட்சம் வாக்காளர்கள் வாக்களித்தனர். தேர்தல் முடிவுகள் வந்த பின்னர் தி.மு.க. 173 இடங்களில் நின்று 138 சட்டமன்ற தொகுதி இடங்களையும், சுதந்திரக் கட்சி 20, இடது கம்யூனிஸ்ட் 11, முஸ்லீம் லீக் 3, வலது கம்யூனிஸ்ட் 2, பிரஜா சோசியலிஸ்ட் 4, சம்யுக்தா சோசியலிஸ்ட 2, தி.மு.க. ஆதரவு பெற்ற சுயேச்சைகள் 2 இடங்கள் பெற்றன. 233 இடங்களில் நின்ற காங்கிரஸ் 49 இடங்களைப் பெற்றது. பாராளுமன்றத்திலும் தி.மு.க. 25 இடங்களைப் பிடித்தது. காங்கிரசுக்குக் கிடைத்தது 3 இடங்கள்தாம்.

அண்ணா பாராளுமன்றத் தேர்தலில் நின்றார். தென் சென்னையில் காங்கிரஸ் வேட்பாளர் குருமூர்த்தியை எதிர்த்துப் போட்டியிட்டு 2 இலட்சத்து 48,659 வாக்குகளைப் பெற்றார். அவர் குருமூர்த்தியைக் காட்டிலும் கூடுதலாக 82, 538 வாக்குகள் பெற்று மாபெரும் வெற்றிவாகை சூடி இருந்தார். ஆயினும், சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி பெற்றுவிட்டதால், கழகத் தோழர்களின் அவாவை ஆர்வத்தை மதித்து ஆட்சிப் பொறுப்பை ஏற்க சம்மதித்தார்.

பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் இமாலய வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, தி.மு.க. சட்டமன்றத்திற்குள் நுழைவதற்கு முன்பாக, திருச்சியில் தங்கியிருந்த தந்தை பெரியாரைச் சந்திப்பதற்காக இரவோடு இரவு புறப்பட்டார் அண்ணா. அவருடன் கலைஞர், நாவலர், அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் சென்றிருந்தனர். "என்னை நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர் பெரியார்தாம். முதலமைச்சர் ஆனதும் நான் அவரைப் பார்க்காவிட்டால், அது மனிதப் பண்பாகாது" என்று பெரியாரைச் சந்திக்க புறப்படும் முன் அவரைச் சென்னையில் சிலர் தடுத்த போது, இப்படியான பதில் கூறியிருந்தார் பேறறிஞர் அண்ணா!

பெரியார், அண்ணா இருவரின் மிகுந்த உருக்கமான சந்திப்பில், "ஐயா நலமா? என்று அண்ணா உட்படத் தம்பிமார்கள் கேட்க, "தாங்கள் நலமா?" என்று பெரியார் கேட்டபடி உணர்ச்சிவசப்பட்டடவாறு செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். குரு, சீடர் இருவர் சந்திப்பிற்குப் பின் வெளியில் வந்த அண்ணா, செய்தியாளர்களிடம் பதிலளிக்கையில், "இந்த ஆட்சியைப் பெரியாருக்குக் காணிக்கையாக்குகிறேன்" (02.03.1967) என்றார்.

பதவி ஏற்பு விழாவை ஆளுநர் மாளிகையில் நடத்தாமல் இராஜாஜி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. திருச்சியிலிருந்து சென்னை திரும்பினார் அண்ணா.

தேர்தலில் மாபெரும் வெற்றி கண்ட திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைவராக, முதலமைச்சர் பொறுப்பை வகிக்க அண்ணா அவர்களை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தனர். 1967 மார்ச் 6 ஆம் நாள் இராஜாஜி மண்டபத்தில் அண்ணா ஆளுநர் உஜ்ஜல் சிங் முன்னிலையில் முதலமைச்சராக இலட்சக்கணக்கான மக்கள் கண்டுகளித்திடப் பொறுப்பேற்றார்.

அரசினர் தோட்ட இராஜாஜி மண்டபத்திற்கு வெளியிலும் உள்ளேயும் மக்கள் கடலென திரண்டு இருந்தனர் பதவியேற்பு நிகழ்ச்சி முடிந்து அண்ணா அமைச்சர்களுடன் மண்டபத்திற்கு வெளியே வந்த போது, "அண்ணா வாழ்க! எங்கள் அண்ணா வாழ்க!" என்று மக்கள் ஆரவாரத்தில் குரல் எழுப்பிக் குதூகளித்தனர்.

அண்ணாவின் அமைச்சரவையில் நாவலர் நெடுஞ்செழியன் கல்வித்துறை, கலைஞர் பொதுப்பணித்துறை, மதியழகன் உணவுத் துறை, கோவிந்தசாமி வேளாண் துறை, சக்திவாணி முத்து தாழ்த்தப்பட்டோர் நலத்துறை, மாதவன் சட்டத்துறை, சாதிக் பாட்ஷா மக்கள் நல்வாழ்வுத் துறை, பாவலர் முத்துசாமி உள்ளாட்சித் துறை என மொத்தம் எட்டு பேர் அமைச்சர்களானார்கள்,

1967 மார்ச் 15ஆம் தேதி சட்டமன்ற வளாகத்தில் உறுதிமொழி கூறிப் பதவியேற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து இந்திய தலைமை அமைச்சர் இந்திராவைச் (11.04. 1967) சந்தித்துத் தமிழ்நாட்டிற்கு வேண்டிய கோரிக்கைகளை எடுத்து வைத்தார். அப்போது மொரார்ஜி தேசாய் போன்ற ஒன்றிய அமைச்சர் பெருமக்கள் தகுந்த மரியாதையோடு டெல்லியில் அண்ணாவை வரவேற்றனர். அண்ணா தமது ஆட்சியில் நிறைவேற்றிய முக்கியமான வரலாற்றுச் சாதனைகள் (1) 1967 ஜூலை 18 அன்று சென்னை அரசு (Ma dras State) என்பதனை மாற்றித் "தமிழ்நாடு அரசு" எனப் பெயர் சூட்டப் பெற்றது. செயின்ட்சார்ஜ் கோட்டை என்பது தலைமைச் செயலகம் எனப் பெயர் மாற்றம் செய்தார். (2) அரசின் ஆட்சி மொழிகளாக தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளே தமிழகத்திற்குப் போதுமானது. இந்தி தேவையில்லை எனத் (23.01.1968) தீர்மானத்தைச் சட்டசபையில் நிறைவேற்றி அண்ணா இந்தியை ஒழித்துக் கட்டினார். (3)சுயமரியாதைத் திருமணச் சட்டம் என்னும் சீர்திருத்தத் திருமணச் சட்டம் (27.11.1967) நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் சட்ட பாதுகாப்பு கிடைத்திடும் வகையில், பெரியாரின் வழி நின்று சமுதாய மாற்றங்காண க் கொண்டு வந்தார்.

அரசுச் சின்னத்தின் கீழே சத்தியமேவ ஜெயதே என்று எழுதப்பட்ட வட சொல்லை நீக்கி, வாய்மையே வெல்லும் என்று தமிழ் சொல்லை எழுத வைத்தார். அண்ணா எம்.பி. பதவி விலகி எம்.எல்.சி ஆனார். வெற்றிடமான தென் சென்னையில்முரசொலி மாறனை நிறுத்தி (08.11.1967), வெற்றி பெற வைத்தார். மே 9 முதல் அண்ணாவின் அரசால் ஆகாஷ் வாணி வானொலி என வழங்கப்பட்டது. மே 15 முதல் ரூபாய் ஒன்றுக்கு ஒரு படி அரிசி திட்டத்தை கொண்டு வந்தார். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பி.யு.சி. வரை இலவச கல்வித்திட்டம். நிலம் இல்லாத ஏழைகளுக்கு இலவச நிலங்கள் வழங்கினார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை சென்ற 1,027 தோழர்களை விடுதலை செய்தார். அண்ணாவின் பெரும் முயற்சியால் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் 1968 ஜனவரி முதல் தேதி முதல் தொடங்கி 10 நாள்கள் நடைபெற்றது. தமிழ் வளர்த்த சான்றோர் பெருமக்கள் 10 பேருக்குக் கடற்கரைச் சாலையில் உருவச்சிலைகள் அமைக்கப்பட்டன. அண்ணாவின் உருவச் சிலையை அண்ணா சாலையில் சர்.ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் திறந்து வைத்தார்.

புன்செய் நிலங்களுக்கு நிலவரி இரத்து, பேருந்துகள் படிப்படியாக அரசுடைமை, ஏழைகளுக்கு இலவசக் கல்வி, கலப்பு மணப்பரிசு குடிசை வாசிகளுக்கு தீ பிடிக்காத வீடு ,சென்னை மக்களின் குடிநீர்ப் பஞ்சம் தீரக் காவிரித் திட்டம் என தனது அரசின் சாதனைகளாகத் தொடர்ந்தார். ஜூலை 8ஒரு கோடி ரூபாய் திரட்டிக் குடிசைவாசிகளுக்குச் செலவிட முடிவு செய்தார். சீரணியின் நோக்கத்தைப் பலப்படுத்தினார். அமைச்சர்களின் மாத ஊதியத் தொகையைப் பாதியாகக் குறைத்தார். ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளில் வரலாற்றில் மறக்க இயலாத சாதனைகளை நிகழ்த்திக்காட்டியவர் பேரறிஞர் அண்ணா. செந்தமிழின் சீரையும் சிறப்பையும் உலகம் அறியும் வகை செய்ய வேண்டும் என எண்ணி இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார்.

தமிழ்த்தாயின் உடலில் நோய் வந்துவிடக் கூடாது என்பதற்காககாலமெல்லாம் பாடுபட்ட அண்ணா புற்றுநோயால் உடல் நலம் குன்றினார். 10091968 இல் அண்ணாவுக்கு அரசுப் பொது மருத்துவமனையில் மருத்துவர் இரத்னவேல் சுப்பிரமணியம் மூலம் இரண்டு முறை பேரியம் சோதனை செய்யப்பட்டது. வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற பலர் வலியுறுத்தியபோதும் அப்படி சென்றால், இங்குள்ள அரசுத் தலைமை மருத்துவர் பெயருக்குக் குந்தகம் ஏற்படும் என்று மறுத்தார்.



இதற்கு இடையில் 1968 ஆகஸ்ட் 21 ஆம்நாள் அன்று பள்ளிகள் என்.சி.சி. அணியில் இந்தி ஆணைச் சொற்கள் நீக்கப்பல நடவடிக்கை மேற்கொண்டார். அண்ணா மலைப் பல்கலைக்கழகம் அண்ணாவுக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பு செய்தது. செப்டம்பர் 10 அன்று மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்டதால், அமெரிக்கா சென்றுமெமோரியல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, டாக்டர் மில்லர் அவர்களால், அண்ணாவுக்குப் பரிசோதனை செய்து அறுவைச் சிகிச்சை செய்துபுற்றுநோய் கட்டி நீக்கப்பட்டது. அண்ணாவுடன் சென்று இருந்த டாக்டர் வளர்ப்பு மகன் டாக்டர் பரிமளம், இரா. செழியன், க. இராஜாராம் உடன் இருந்தனர். அவ்வப்போதுபொதுப்பணித்துறை மற்றும் போக்குவரத்து கழக அமைச்சராக இருந்த கலைஞர் உள்ளிட்ட அமைச்சர்கள் அண்ணாவுடன் தொலைப்பேசியில் பேசி நலம் விசாரித்துக் கொண்டனர்.

சென்னையில் இருந்த போது, ஒரு பெண்மணி அவரைச் சந்தித்து, என் கணவர் நாளைக் காலை தூக்கிலிடப்படவுள்ளார், அவர் உயிரைக் காப்பாற்றுங்கள்" என வழக்கறிஞர் ஒருவரை அழைத்துக் கொண்டு தனது கைக்குழந்தையுடன் வந்து நின்ற போது, அந்த கோரிக்கை நிறைவேற்ற அமெரிக்காவில் சிகிச்சை பெற்று இருந்த நேரத்தில், தந்தி மூலம் அந்தத் தூக்குத் தண்டனையை நிறுத்தி வைக்க உத்தரவிட்டவர் தான் பேறிஞர் அண்ணா. எந்தக் குடும்பத்தைப் பார்த்தாலும் அவர் மறைவின் போது அண்ணா!.. அண்ணா ... என்று அழுதது அனைவரும் நெஞ்சத்தை உருக்கக் கூடியதாகும். அவர் மரண ஊர்வலத்தில் 15 இலட்சம் பேர் கலந்து கொண்டதாகக் "கின்னஸ்" பதிவு கூறுகிறது.

25 வயதிற்கு மேல் 60 வயதுக்குள் அண்ணா படைத்த வரலாறு பேசும் படைப்புகள் : சிறுகதைகள் 138, நாவல்கள் 5, குறுநாவல்கள் 31, நாடகங்கள் 12 (பெரியது), திரைப்படங்கள் 9, ஓரங்க நாடகங்கள் 62, கவிதைகள் 63, கடிதங்கள் 290 (பக்கங்கள் 3,000 மேல்) கட்டுரைகள் 2,000 த்துக்கு மேல், ஆங்கிலக் கட்டுரைகள் 352, ஆங்கில கடிதங்கள் 100 மேல். ஆங்கில சொற்பொழிவுகள் 4,000 க்கு குறையாமல். தமிழ் சொற்பொழிவுகள் 12,775. தமிழ் ஏடுகள் 8, ஆங்கில ஏடுகள் 2 திரைப்படங்கள் 9 இப்படி எண்ணற்ற சாதனைகள் எழுத்துகளிலும் சொற்பொழிவு நிகழ்த்தியவர் அண்ணா.

"பூவிதழின் மென்மையிலும் மென்மையான புனித உள்ளம்...அன்பு உள்ளம்.. அரவணைக்கும் அன்னை உள்ளம்... அவர் மலர் இதழ்கள் தமிழ் பேசும்! மா ,பலா, வாழை எனும் முக்கனியும் தோற்றுவிடும்..." என்று எம் அண்ணா! இதயம் மன்னா ! என்று தமது கவிதாஞ்சலியில் அண்ணாவைப் பற்றி எழுதிக் கதறி அழுது கவிதை பாடினாரே கலைஞர் ...அறிவு மன்னனாக, பொதிகை மலைத் தென்றலாய்ப் போதாகி மலர்கின்ற தமிழ் உணர்வின் புதுமணமாய்ப் பதிகத்துப் பொருளாய்ப் பழந்தமிழர்ப் புறப்பாட்டாய் வந்துதித்தான் என் அண்ணன்... அண்ணன் அன்று முதல் கடற்கரையில் அமைதியாகி 56 ஆண்டுகள் ஆகிவிட்டன! ஆம்; இதோ இன்று அவருடைய தலையாய மகன் தளபதி தலைமையில் கழகக் கண்மணிகளோடு கண்ணீர் ஊர்வலம் கல்லறை நோக்கி செல்கிறது !

"கதிர் முற்றாத நிலையில், பயிர் காற்று அடித்த பக்கம் எல்லாம் ஆடுவதைப் பார்க்கலாம்; கதிர் முற்றிய நிலையில், நெற்பயிர் வயலிலே படுத்தபடி இருக்கும். முற்றிய கதிரின் அடக்க உணர்ச்சியை நாம் பெற வேண்டும்." என்று தம்பியருக்குச்சமயம் கிடைத்த பொழுதெல்லாம், அடக்கத்தை வலியுறுத்த அண்ணா தவறவில்லை!.

மேற்கண்ட அண்ணாவின் பொன்னெழுத்துக்களை கழகத்தவர்கள் நாம் மறந்து விடக் கூடாது.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், ஆற்காடு ஊராட்சி ஒன்றியம். தாழனூர் ஊராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2024–2025 –ல் அரசு நிதி ரூ.30லட்சம் மற்றும் SUN TV NET WORK LTD CSR நிதி ரூ.15 இலட்சம் என ரூ.45லட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஒன்றியகுழு தலைவர் புவனேஸ்வரி சத்தியநாதன், துணைத் தலைவர் ஸ்ரீமதி நந்தகுமார் மற்றும் மாவட்டஅவைத் தலைவர் ஏ.கே.சுந்தர மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் மு.சிவானந்தம், ஒன்றிய செயலாளர் ஏ.வி.நந்தகுமார், நகர செயலாளர் ஹிமாயூன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ், ஆ.சவுந்தர், பேரூர் செயலாளர்கள் பாஸ் என்கிற நரசிம்மன், சீனிவாசன், அவைத்தலைவர் தண்டாயுதபாணி, துணை செயலாளர் கோபால கிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி ஜெயப்பிரகாஷ், வேப்பூர் ராமு, மற்றும் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மோகன், துணை அமைப்பாளர்கள் ஸ்ரீநாத், மக்சூத் அஹ்மத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பேரறிஞர் பெருந்தகை அண்ணா நினைவு நாள்! வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ வேண்டுகோள்!



வேலூர், பிப். 3-

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவுநாளை அனுசரிப்பது குறித்து மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்ற கழகத்தை உருவாக்கி, நிறுவி இதன்மூலம் திராவிட கொள்கைகளை வகுத்து இளைஞர்கள், மாணவர்கள், தமிழ் உணர்வாளர்கள் ஆகியோர்களிடையே பெரும்தாக்கத்தை ஏற்படுத்தி இதன்மூலம் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழக ஆட்சியை அமைத்து முற்போக்கு திட்டங்களை தீட்டி அதை நடைமுறைபடுத்தி பெரும் சாதனை படைத்து தமிழ்நாட்டை முன்னேற்ற பாதைக்கு முன்னெடுத்த முன்னாள் முதல்வர், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 56ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு இன்று 03.02.2025 காலை 10.00 மணி அளவில் வேலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படுகிறது. இதைத்தொடர்ந்து காலை 10.15 மணிக்கு வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அவர்களின் தலைமையில், வேலூர் மாநகர செயலாளரும், சட்டப்பேரவை உறுப்பினருமான ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ மற்றும் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி ஆகியோர்கள் முன்னிலையில் வேலூர் மாநகர திமுக அலுவலகத்திலிருந்து அமைதி பேரணி புறப்பட்டு வேலூர், பழைய மாநகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப் படுகிறது.

எனவே வேலூர் மாவட்ட திமுகவிற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், வட்ட, வார்டு, ஊர்கிளை நிர்வாகிகள் மற்றும் முன்னாள் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் வேலூரில் நடைபெற உள்ள மாலை அணிவிப்பு நிகழ்விலும், அமைதிப்பேரணி நிகழ்விலும் கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

## காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

காஞ்சிபுரம், பிப். 3 -

காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன் னிட்டு இன்று (3.2.2025 திங்கள் கிழமை) காலை சரியாக 6.30 மணிக்கு காஞ்சிபுரம் காந்தி ரோட்டில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவுதூணிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேறறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது .

எனவே நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், வார்டு, கிளைச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழக முன்னோடி கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச் செல்வன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க. மாசிலாமணி**
**பிப்ரவரி 3 (2015)**



சென்னை தெற்கு மாவட்டம், சைதாப்பேட்டை பகுதியில், வட்டக் கழகச் செயலாளராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் – சைதை கிழக்கு பகுதியின் அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**